செய்தி வெளியீடு எண்: 123 நாள்: 08.02.2011

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை சார்பாக 37வது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில், 2011ம் ஆண்டு மகளிர் தின விழாவினையொட்டி சிறப்பு நிகழ்ச்சிகள்.

சென்னை– தீவுத்திடலில் தற்போது நடைபெற்றுவரும் 37வது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில், 2011ம் ஆண்டு மகளிர் தின விழாவினை தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை சார்பாக பொதுமக்கள் அனைவரும் கண்டுகளிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது. இவ் விழாவில் கீழ்க்காணும் சிறப்பு நிகழ்ச்சிகள். மகளிருக்காக நடத்தப்படுகிறது.

### (1) 12.02.2011 ( சனிக்கிழமை ) மாலை 3.00 மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சிகள்:

(அ) குடும்ப வன்முறை, பெண்ணடிமை என்ற பானையை உறியாக கட்டி பெண்களை வைத்து அடிக்க வைப்பது.

(ஆ) பொங்கல் விழா கொண்டாட்டம்.

(இ) பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவிகளுக்கான ஊட்டச்சத்து நிறைந்த உணவு தயார் செய்தல் போட்டி

### (2)19.02.2011 (சனிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சிகள்

(அ) பெண்களின் பெருமையை நிலை நாட்டுவது பழைய பாடல்களா (அல்லது) புதிய பாடல்களா ? என்ற தலைப்பில் பாட்டுப் போட்டி

### (3)26.02.2011 (சனிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சிகள்

(அ) பெண்களின் உரிமைகளை நிலைம நாட்டுவது சட்டங்களா (அல்லது ) சமூகமா என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்துதல்.

(ஆ) அழகுக் கலை போட்டி

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9